நூலகம்
யாழ்ப்பாணம்
படிப்பகம்

பக்கங்கள் எட்டு

விலைரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 12 வியாழக்கிழமை ( 28-9-2000 ) தொ பேசி:- 3378 ஒலி: 283

இன்று

க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
கிறிஸ்தவம்
26ஆம் திகதி தொடர்

## ஓயாத அலைகள் - 4 இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

# கிளாலியில் புலிகள் அதிரடித் தாக்கு

# ஒன்றரைகிலோமீற்றர்புலிகள்வசம்!

### குண்டுச் சத்தங்களால் தென்மராட்சி அதிர்ந்தது

(நமது நிருபர்)

தென்மராட்சிப் பகுதியில்ஆறுமுனைகளில்இருந்து ஓயாத அலைகள்-4 இராணுவ நடவடிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியில் இருந்து ஆரம்பித்திருப்பதாக லண்டனில் இருந்து விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த முன்னேற்ற நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் கிளாலியில் இருந்து பல இராணுவ காவலரண்களை அழித்துக் கொண்டு சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் முன்னேறியுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கையின் போது 9 புலிகள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ள ஓயாத அலைகள் நான்கு இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் கிளாலிப் பகுதியிலிருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் முன்னேறியதாகவும் அப்பகுதியில் இராணுவத்தினரின்பலகாவலரண்கள் அழிக்கப்பட்டதாகவும் புலிகளின் லண்டன் தலைமை செயலகம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளாலிப் பகுதியில் விடுதலைப் புலிகள் முன்னேறியதை ஒத்துக்கொண்ட இராணுவ வட்டாரங்கள் அவர்களை திருப்பித் தாக்கி இழந்த பிரதேசத்தை மீட்டுக் கொண்டதாகவும் இராணுவத் தரப்பு தெரிவிக்கின்றது.

புலிகளின் தாக்குதல்களை இராணுவத்தினர் யுத்தவிமானங்கள் பல்குழல் பீரங்கிகள் ஆகியவற்றின் துணையுடன் முறியடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி, எழுதுமட்டுவாள் மற்றும் வடமராட்சி நாகர் கோயில்பகுதியில் பலத்தஎறி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம், வரணியில் ஷெல்வீச்சு ஆறு பிள்ளைகளின் தாய் உட்பட

### மூன்று பேர் பரிதாப மரணம்

தென்மராட்சி கொடிகாமம் பகுதியிலும், வரணிப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் அவரது இளம் மகளும்,

## தந்தையின் மரண அறிவித்தல் நோட்டீஸ் ஒட்டியவருக்கு பலத்த அடி

(கொழும்பு)

தென்னிலங்கையில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் மீது அரசியல் கட்சிகள் மாறிமாறி தாக்கி வரும் சம்பவத்தைக் கேட்டு காது புளித்துப் போய்விட்டது.

ஆனால் கடந்தவாரம் மரண அறிவித்தல் நோட்டீஸ் ஒட்டியவருக்கு தர்ம அடி விழுந்துள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கண்காணிப்புக் குழுவினருடன் கட்சித் தலைவர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேர்தல் நிலவரங்களை ஆராய்வதற்கு யாழ்ப்பாணம் வந்திருந்த தேர்தல் கண்காணிப்புக்குழுவினர் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்தபின் நேற்று கொழும்பு திரும்பினர்.

போத்துக்கல் நாட்டைச் சேர்ந்த றொபேட் பேமன்;

(8ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த களத்தில் ரத்வத்த படையினருக்கு உற்சாகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில்இடம்பெற்றுவரும் உக்கிரமான சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த பலாலியில் தங்கியிருந்து யுத்தத்தைவழிநடத்தி வருவதாக

(8ஆம் பக்கம் பார்க்க)

## கள்ள வாக்குப் பெட்டிகளை இனங்காண "ஸ்ரிக்கர்கள்"

தென்மராட்சி கொடிகாமம் பகுதியிலும், வரணிப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் அவரது இளம் மகளும், ஆறு பிள்ளைகளின் தாயார் ஒருவருமாக மூவர் பலியானதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இச்ஷெல் வீச்சுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது, ஷெல் வீச்சில் காயமடைந்த நால்வரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (8 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனவிபத்தில் முன்னாள் படை அதிகாரி கொத்தலாவல பலி!

(கொழும்பு)

முன்னாள் இராணுவ அதிகாரி லெப்டினண்ட் கேணல் ஜெயந்கொத்தலாவல கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவிசாவளைக்குச் சென்று விட்டு கொழும்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கையில் இரவு 10 மணியளவில் இவர் வந்த வாகனம் புல்டோசர் ஒன்றுடன் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரண

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒவியர் மார்க் காலமானார்

(கொழும்பு)

பிரபல ஓவியரும் தமிழ் மக்கள் மத்தியில் நவீன ஓவியக்கலையை அறிமுகப்படுத்தியவருமான ஏ. மார்க் (வயது 67) நேற்றுக்காலை மன்னாரில் காலமானார்.

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகக் கொண்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தலை நடத்தக் கோரி கொழும்பில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

எதிர்வரும் பொதுத் தேர்தலை நேர்மையாகவும் நீதியாகவும் நடத்தக் கோரி அகில இலங்கை தொழிலாளர் பெண்கள் அமைப்பினர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை நடத்தினர்.

இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் நேற்றுநண்பகல் 12.30 மணி தொடக்கம் 1.30மணி வரையிலான ஒரு மணித்தியால ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுமார் 500க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (வ)

## தேர்தல் வன்முறை 622ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின்பு இதுவரை 622 தேர்தல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுவரை ஐக்கியதேசியக்

(8-ம் பக்கம் பார்க்க)

## இனங்காண "ஸ்ரிக்கர்கள்"

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஏற்படக்கூடிய மோசடிகளை பலவழிகளிலும் குறைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார்.

வாக்குப்பெட்டிகளில் கள்ள வாக்குகளை போடப்படுவதை தடுப்பதற்கும் கள்ள வாக்குப்பெட்டிகளைக் கண்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

## மிக நீண்டகாலமாக திருத்தப்படாத வீதிகள் உடன் திருத்தப்படும்

### வி. கே. ஜெகன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப் பகுதியில் நீண்டகாலமாகத் திருத்தப்படாமலிருந்த வெள்ளாந் தெரு, மதவடிலேன், மணல்தறை லேன், பூநாறிலேன் ஆகிய வீதிகளை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் வீதிகள் சேதமடைந்

(8-ம் பக்கம் பார்க்க)

## எழுதுவினைஞர் நியமனக் கடிதம் யாழ். செயலகத்தில் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசின் கீழ் எழுதுவினைஞர் சேவைக்கு நியமனம் பெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்படுமென்று மத்திய அரசு எழுதுவினைஞர் சேவைக்கு தெரிவானோர் சங்கம் தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ

## சிறு விளம்பரம்

**சிமெந்துக் கூரை ஓடுகள் விற்பனைக்கு**

ஜீ.ரி.சற். அரச சார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும் வீட்டுத்திட்டங்கள் பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சிமெந்துக் கூரை ஓடுகள் முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையும், விற்பனை நிலையமும் லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை இணுவில். (1772)

யாழ். பல்கலைக் கழகத்தில்

# சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு தெரிவானோர் விபரம்

யாழ். பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்கு (99 / 2000 கல்வியாண்டு) தெரிவான 50 பேரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன. அவை வருமாறு:

சின்னிஜா அகிலன், அனித்தா புலேந்திரன், பாலசுந்தரம் பாஸ்கர், டயானி யேசுதாசன், இராஜலிங்கம் இளங்கோ, பேதுருப்பிள்ளை எட்மன் ஜெயராஜ், ஜெயதேவி நாகலிங்கம், கணேசமூர்த்தி கோகுலபாலன், தனேந்திரகுமரன் கேதப்பிரியன், தர்மலிங்கம் மயூரன், சண்முகநாதன் மனோகரன், ஜெயபாலசிங்கம் மயூரதன், மீரா கிருஸ்ணன், யோகேஸ்வரன் நிஷாந்தன், தங்கராஜா நிமலன், மகாலிங்கம் பிரசாந்தன், சுகுமார் பிரபாகரன், சந்திரபோஸ் ரமேஷ், வெற்றிவடிவேல் இராஜேந்திரன், சிவானந்தன் ரஜீவன், நற்குணராஜா ரமணன், கணேசராஜா ரவீந்திரராஜா, சத்தியசீலன் ரமேஸ்குமார், நாகலிங்கம் ரமேஸ்வரன், பத்மநாதன் சாந்தரூபன், இராசையா சசிக்குமார், சர்மிலா திருச்செல்வம், சிந்துஜா பத்மநாதன், சோபனா விஸ்வநாதன், நந்தகோபால் செல்வக்குமரன், யேசுதாசன் ஸ்ரீகாந், செல்வவதனி செல்வராஜா, சுதாசினி அருளானந்தம், சிவசுப்பிரமணியம் ஸ்ரீதர், சிங்கராஜா செந்தூரன், செல்வராஜா சகீலன், தபோதினி கிட்ணமூர்த்தி, வீரசிங்கம் தர்மேந்திரன், தீபனா குலசிங்கம், பொன்னுத்துரை தயாளன், உஷாநந்தி பேரானந்தம், இராஜரட்ணம் வித்தியானந்தன், விஜிதா பேரின்பநாதன், வரதராஜா வித்தியாபரன், ஜெயராஜ குலேந்திரன்-வல்லின், இராஜதுரை ராஜ்குமார், அருள்ராஜ் ஸ்ரீஜெ[illegible], நெயுமென்சுஜா நல்லதுரை, அல்பிரட்மரியதாஸ் நற்குணராஜா, கார்த்திகாஜினி திருநாவுக்கரசு, (4)

## வருடாந்த விளையாட்டு

(மானிப்பாய்)

அளவெட்டி தெற்கு ஈஸ்வரன் பாலர் பாடசாலையின் 17வது வருடாந்த விளையாட்டு விழா கடந்த 24-ந் திகதி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு அளவெட்டி அரசினர் வைத்திய சாலை பொறுப்பதிகாரி வை. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார். (த-120)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை அறிவித்தல்

1999/ 2000, 2000/ 2001 கல்வியாண்டிற்கு கலைப்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான ஆங்கில தகுதிகாண் பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல் 28 09.2000 அன்று நடைபெற மாட்டாது. இப்பரீட்சை 02. 10. 2000 (திங்கட் கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

பதிவாளர்

[கி-829]

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 19ஆம் திகதி வதிரிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவத்தினருடனான மோதலின்போது

● மேஜர் தமிழினியன் (மாணிக்கவாசகர் கருணாகரன்) யாழ் மாவட்டம்

என்ற போராளியும் நேற்று முன்தினம் பளைப் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தில் தலைமைக் காவலர்

● சின்னராசா சுதர்சன் (கிளிநொச்சி மாவட்டம்)

என்பவரும் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந - 5)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 26-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகிறது

### சங்கானை

161631 பி
146308 ஏ
151827 ஏ
157731 ஏ
157731 சி
157731 ஈ
157733 பி
157805 ஏ
157805 சி
167824 பி
158496 ஏ
158545 ஏ
158546 சி
158609 ஏ
158609 சி
158665 ஏ
158965 ஏ
160471 ஏ
160471 சி
160478 ஏ
160554 ஏ
160570 ஏ
160610 ஏ
160682 ஏ
160682 சி
160700 ஏ
160870 ஏ
160906 ஏ
161488 ஏ
161513 ஏ
161515 ஏ
161599 ஏ
161618 ஏ
161671 ஏ
161903 ஏ
161915 ஏ
164644 ஏ

141688 ஏ
150574 ஏ
151828 ஏ
157731 பி
157731 டி
157733 ஏ
157733 சி
157805 பி
157824 ஏ
157863 ஏ
158496 பி
158545 பி
158545 டி
158609 பி
158609 டி
158935 ஏ
160454 ஏ
160471 பி
160471 டி
160478 பி
160555 ஏ
160570 பி
160653 ஏ
160682 பி
160682 டி
160848 ஏ
160924 ஏ
161489 ஏ
161513 பி
161515 பி
161599 பி
161618 பி
161671 பி
161903 பி
161915 பி
164644 பி

### யாழ்ப்பாணம்

143041 ஏ
143083 ஏ
150072 ஏ
152850 ஏ
156334 ஏ
156386 பி
156386 டி
156496 ஏ
156496 சி
156625 ஏ
156625 சி
156630 பி
156683 பி
156683 டி
159102 ஏ

143041 பி
144539 ஏ
150072 பி
152850 பி
156386 ஏ
156386 சி
156403 ஏ
156496 பி
156496 டி
156625 பி
156630 ஏ
156683 ஏ
156683 சி
156683 ஈ
159102 பி

159102 சி
159107 பி
159324 ஏ
159388 ஏ
159396 ஏ
159453 பி
159453 டி
159453 எவ்
160993 பி
161013 பி
161013 டி
161075 ஏ
161083 ஏ
161089 ஏ
161116 பி
161116 டி
161191 ஏ
161195 பி
161199 ஏ
161208 ஏ
161242 பி
161242 டி
161243 சி
161245 ஏ
161245 சி
161271 ஈ
160271 சி
161271 ரி
161289 பி
162313 ஏ
161313 சி
161326 ஏ
161326 சி
161337 ஏ
161468 ஏ
161369 சி
161383 பி
161388 ஏ
161419 ஏ
161419 சி
163141 ஏ
163163 ஏ
163201 பி
163363 ஏ

159107 ஏ
159107 சி
159324 பி
159388 பி
159453 ஏ
159453 சி
159453 ஈ
160993 ஏ
161013 ஏ
161013 சி
161013 ஈ
161075 பி
161083 பி
161116 ஏ
161116 சி
161116 ஈ
161195 ஏ
161195 சி
161199 பி
161242 ஏ
161242 சி
161243 பி
161243 டி
161245 பி
161267 ஏ
161271 பி
161271 டி
161289 ஏ
161289 சி
161313 பி
161313 டி
161326 பி
161326 டி
161337 பி
161368 பி
161383 ஏ
161383 சி
161410 ஏ
161419 பி
163139 ஏ
163141 பி
163201 ஏ
163201 சி

### நல்லூர்

152492 ஏ
153037 பி
156423 பி
156648 ஏ
156648 சி
157492 சி
159074 ஏ
159074 சி
159074 ஈ
159109 பி
159260 ஏ
159260 சி
159272 ஏ
159280 யி
159439 பி
161034 ஏ
161053 பி

153037 ஏ
156423 ஏ
156423 சி
156648 பி
157492 பி
157492 டி
159074 பி
159074 டி
159109 ஏ
159109 சி
159260 பி
159265 ஏ
159280 ஏ
159439 ஏ
161017 ஏ
161053 ஏ
161081 ஏ

தொடரும்

## அரசாங்க அறிவித்தல்

# பாராளுமன்றத் தேர்தல் 2000-10-10

## இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

பின்வரும் பிரதேசங்களுக்கான இடம்பெயர்ந்த வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் பின்வரும் அஞ்சல் அலுவலகங்களுக்கு என்னால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த வாக்காளர்கள் இவ் அஞ்சல் அலுவலகங்களுக்குச் சென்று ஆளடையாளத்தை நிரூபித்து தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன். இவ் அட்டைகளை 2000-10-10ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். ஆயின் 10-10-2000ம் திகதி வாக்களிப்பு முடிவு நேரமாகிய பி ப. 4-00மணிக்கு முன்னதாக தாங்கள் வாக்களிக்க வசதியாக பெற்றுக்கொள்வது தங்கள் பொறுப்பாகும்.

| பிரதேசம் | அஞ்சல் அலுவலகம் இயங்கும் இடம் |
| --- | --- |
| கைதடி, நாவற்குளி, மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தனங்களப்பு | கோப்பாய் அஞ்சல் அலுவலகக் கட்டடத்தில் இயங்கும் கைதடி அஞ்சல் அலுவலகம். |
| சாவகச்சேரி, மீசாலை, மட்டுவில், நுணாவில், மட்டுவில், சரசாலை, எழுதுமட்டுவாள் தெற்கு, வரணி தாவளை-இயற்றாலை, மந்துவில் | கரவெட்டி அஞ்சல் அலுவலகக் கட்டடத்தில் இயங்கும் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம். |
| கிளாலி, இத்தாவில், முகமாலை, புலோப்பளை, சோரன்பற்று, முகாவில், கோவில் வயல் | கரவெட்டி அஞ்சல் அலுவலகக் கட்டடத்தில் இயங்கும் பளை அஞ்சல் அலுவலகம். |

தெரிவத்தாட்சி அலுவலர்
தேர்தல் மாவட்டம்;இல 10,யாழ்ப்பாணம்

(கி - 831)




மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும்
வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்



சுபத்திரன் (றொபேட்)

அ. வரதராஜப் பெருமாள்

சுயேச்சைக்குழு -2 X

(ஈ. பி. ஆர். எல்.எஃப்)

(1765)

# ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலேயே இல்லப்போட்டி இடம் பெறுவது பாராட்டிற்குரியது

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையர் தெரிவிப்பு

(அரியாலை)

''தென்னிலங்கையில் ஏற்படுத்தப்பட்ட சகல கல்வியியற் கல்லூரிகளும் சகல வளங்களுடனும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால்யாழ். மண்ணில் பல வசதியீனங்கள் இருந்தாலும் தொடங்கப்பட்ட ஆரம்ப ஆண்டிலேயே இவ்வாறான தொரு விழாவை யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரிகொண்டாடுகின்றமை பாராட்டத்தக்கது.''

யாழ்ப்பாணத்தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்லங்களிடையிலான முதலாவது வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அண்மையில்(16/9) இராமநாதன் கல்லூரிமைதானத்தில்,பீடாதிபதிதிருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ''இங்கு பயிலும் ஆசிரியமாணவர்களுக்குக்கூட்டுறவுக் கல்வி பற்றிய அறிவும் இன்றியமையாதது. கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டில் வாழும் மக்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் அமைப்பு என்ற வகையில் கூட்டுறவுக் கல்வியை பல்கலைக் கழகங்களில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பற்றி அரசும் மாகாண கல்வி நிலையமும் ஆராய்ந்து வருகின்றன. கல்வியியற் கல்லூரிகளுக்கு இணையான வகையில் கூட்டுறவுக் கல்லூரி அமைய இருக்கிறது. இது வடக்கு - கிழக்கு மக்களுக்குபேருதவியாகஇருக்கும்'' என்றார்.

கல்வியியற்கல்லூரியின்பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையுரையில்:- ''முதலாவது இல்ல மெய்வல்லுநர் போட்டியை பல உயர் கல்வி நிறுவனங்கள் தோற்றம் பெற்ற பொன்னம்பலம் இராமநாதனின் மண்ணில் நடத்துவதில் மிகுந்த சந்தோசமடைகின்றேன். விளையாட்டுப் போட்டிகள் ஆசிரிய மாணவர்களின் மனப்பாங்கு விருத்திக்கும், திறன் விருத்திக்கும். ஒழுக்க விருத்திக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. இங்கு அவர்கள் பெறும் பயிற்சி பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவி புரியும்.

எமக்கு பல்வேறு வகையிலும் உதவிகள் பல கோணங்களிலிருந்தும் சமூதாய அங்கத்தவர்களிடமிருந்தும் கிடைத்த வண்ணமுள்ளன. இவை சரியான தருணத்தில் கிடைப்பதனால் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முடிகின்றது என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட எஸ்.கணேசமூர்த்தி(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணம் பொருள்) உரையாற்றுகையில்:- ''கல்விச் சமூகத்திற்கு வழிகாட்டிகளான நீங்கள் பயிற்சியை முடித்து வெளியேறி பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு உதவ வேண்டும். நிர்க்கதிக்குள்ளான மக்களை மீட்டெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் கஷ்டமான சூழ்நிலையில் கைகொடுத்து உதவி அடிமட்ட மக்களைத் தூக்கி விடுகிறது. இன்று முதியவர்கள் தான் இதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இளம் தலைமுறை விலகி ஓடுகிறது. நீங்கள் அவ்வாறிராமல் நலிவுபட்ட மக்களை மேம்படுத்த கூட்டுறவாக செயற்பட வேண்டும்'' என்றார்.

(க-106)

## சுகாதார வசதிகளற்ற நிலையில் 36 நலன்புரி நிலையங்கள்

### இடம்பெயர்ந்தோர் தவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது இயங்கிவருகின்ற 36 இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் அடிப்படைச் சுகாதார வசதிகள் திருப்திகரமாக இல்லாமல் இருப்பதால் பல்வேறு விதமான அசௌகரியங்களை அங்கு வாழ்கின்ற மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையினால் நலன்புரிநிலையங்களில் வாழ்ந்து வரும் மக்கள்மத்தியில்சொறி, சிரங்கு, காய்ச்சல், வயிற்றுளைவு,மலேரியா போன்ற நோய்கள் காணப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இடம் பெயர்ந்தோர் நலன் புரிநிலையங்களில் வாழ்கின்ற மக்களுக்கான நடமாடும் இலவசவைத்திய சேவையை நடத்திவந்த ஒருதேசியமட்ட அரசசார்பற்ற நிறுவனத்தின் பணிகள் சுகாதாரத்துக்குப் பொறுப்பான திணைக்களம் ஒன்றினால் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் பலவகைப் பட்ட சுகாதார மருத்துவப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-77)

## வாகனத்தில் மேடையமைத்து பிரச்சாரம் செய்யும் ஜே.வி.பி. யினர்

(வவுனியா)

வாகனத்தில் மேடையமைத்து நடமாடும் பிரச்சாரக் கூட்டமொன்றினை ஜே.வி.பி. யினர் வவுனியாப் பகுதியில் நடத்தி வருகின்றனர்.

அலங்கரிக்கப்பட்ட வாகனம் ஒன்றில் மேடையமைத்து பொதுச்சந்தை, பஸ் நிலையம் என வவுனியாவின் முக்கிய பகுதிகளில் இவர்கள்பிரச்சாரக் கூட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியாவில்,பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு தடை விதித்திருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை,

பாஸ்நடைமுறைதொடர்ந்தும் நடைமுறையில் இருக்க வேண்டுமானால் ஐக்கியதேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் வாக்களியுங்கள்.

இராணுவ அடக்கு முறையற்று சுதந்திரமாக நடமாட விரும்பினால் எமக்கு வாக்களியுங்கள் என அவர்கள் கோரி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

(உ)

## யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் மழை நீர் தேக்கம்; பயணிகள் சிரமம்

(ஈச்சமோட்டை)

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் மழை நீர் தேங்கி நிற்பதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

பேருந்து உள் நுழையும் போதும்வெளியேறும்போதும் வெள்ள நீரை அடித்துச் செல்வதனால் பயணிகள் வெள்ள நீரினால் நனைக்கப் படுகின்றனர்.

இப் பேருந்து நிலையப் பகுதியை சம்பந்தப்பட்டவர்கள் உரியமுறையில் செப்பனிட்டு இருந்தால் இவ்வாறு மழைநீர் தேங்கி நிற்காது என்றும், அடைமழை பொழிவதற்கு முன்னர் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டால் பயணிகளின் சிரமம் குறையும் என்றும் பயணிகள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது செ59

### ஆணைக்குழு நியமிக்கவும்

ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட அமைச்சர் அஷ்ரப்பின் கொலை தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட உலமா சபை கோரிக்கைவிடுத்துள்ளது[வ]

## உலக உணவு ஸ்தாபனம் இலங்கைக்கு 20 கோடி டொலர் உதவி

இலங்கை மக்களின் நன்மைக்காக உலக உணவு ஸ்தாபனம் இதுவரை 20 கோடி அமெரிக்க டொலரை உதவியாக வழங்கியுள்ளது.

1968 ஆம்ஆண்டு, உலக உணவு ஸ்தாபனமும், அரசாங்கமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இவ்வுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது

இந் நிறுவனத்தினால் 31 அபிவிருத்தித் திட்டங்களும் 20 அவசரகாலமற்றும் நீண்டகால நிவாரணப் பணிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

சமூகத்தின் மிக வறுமையான பிரிவினரை இனம் கண்டு பலதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வறுமை ஒழிப்பு' உணவுப் பாதுகாப்பு இயவற்றால் சுமார் 30 லட்சம் மக்கள் நன்மைபெற்றதாகவும் தெரியவருகிறது.

(க-4)

## இராசி பலன்

28/09/2000

(புரட்டாதி 12 வியாழன்)

பிரதமை

பி.இ. 12.52 வரை

அத்தம்

பி.இ. 12.13 வரை

இராகுகாலம்

1.32- 3.02

சுபநேரம்

7.32- 9.02

நவராத்திரி விரதாரம்பம்

**மேடம்**
சந்தோசமான செய்தி, முயற்சி பலிதம், செய்தொழில் மேன்மை, சத்துரு ஜெயம்.

**இடபம்**
சொத்துக்களால் கவலை, சிறு வியாதி, காரியம் ஒரளவு நிறைவேறும்.

**மிதுனம்**
சகோதரர்நன்மை, நினைத்தது கை கூடும், உறவினரால் வெறுக்கப்படல்.

**கடகம்**
தன லாபம், குடும்ப சுகம் பிரயாணம், முயற்சி பலிதம்.

**சிங்கம்**
வாக்குக் கலகம், காரியத் தடை, மனச்சோர்வு, குடும்ப சுகக்குறை.

**கன்னி**
உடல் நலம், தனவிரயம், தெய்வ சிந்தனை.

**துலாம்**
பிரயாணம், சுபசெலவு, வியாபார நிலை, முன்னேற்றம், காரியம் தாமதம்.

**விருச்சிகம்**
தன விரவு, நினைத்தகாரியம் கை கூடும், கீர்த்தி, நன்மை விருத்தி.

**தனுசு**
தொழிலால் மேன்மை, முயற்சி பலிதம், நன்றிக்கடன் செலுத்துதல்.

**மகரம்**
நிலை மாற்றம், வீண்பயம் உறவினர் வருகை, பிரயாணம்.

**கும்பம்**
மனச் சோர்வு, பிரயாண பயம், கடன் தொல்லை.

**மீனம்**
காரியஅனுகூலம், விருந்துபசாரம், சுவாரஸ்யம், பிரயாணம்.

வளவன்

## விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் 600 இராணுவத்தினர் உள்ளனர்

### திருமதி விஷாகா தர்மதாச தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதியில் கடமையாற்றிய சுமார் 600 இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ளதாககாணாமல் போன இராணுவத்தினரின் பெற்றோர் அமைப்பின் இணைப்பாளர் திருமதி ''விஷாகா தர்மதாச'' தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மகாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை விடுவிக்கவும் அவர்கள் தொடர்பான மேலதிக தகவல்களை பெறவும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்பும் ஊக்கமும் தங்கள் அமைப்புக்கு வலுவூட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை புலிகளின் பாதுகாப்பிலுள்ள தங்கள் பிள்ளைகளின் சரியான தகவல்களை பெற்றுத் தருமாறு ஐ.சி.ஆர்.சியிடம் கேட்டுள்ளதாகவும் இதற்கு புலிகள் சாதகமான பதிலை வழங்குவார்கள் என்றும் தாம் நம்புவதாகவும் திருமதி விஷாகா மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-4)

விவசாயிகள் ஐக்கியப்பட வேண்டும்
அனைவரும் ஸ்தாபன மயப்படுத்தப்பட வேண்டும்
விளைபொருட்களுக்கு உச்ச விலைகளும்
பரந்தளவிலான சந்தை வாய்ப்புகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

விவசாயிகளின் இவ்வெண்ணங்கள் ஈடேறி, வாழ்க்கைத்தரம் உயர எம்மை ஆதரித்திடுவீர்!

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)
(1689)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## கிறிஸ்தவம்

மாதிரி வினாத்தாள் 2 பகுதி - I

ஆக்கம்; யாழ் மறைக்கல்வி நிலையம்

நான்கு விடைகளில் சரியான விடையை தெரிவு செய்க

21) எப்பிராத்தா எனப்படும் பெத்லேகமே, யூதாவின்கோத்திரங்களுக்குள் நீசிறிய ஆயினும் இஸ்ராயேலில் ஆட்சி செலுத்தப் போகிறவர் உன்னிடமிருந்தே எனக்கு என்று தோன்றுவார் இவ் இறைவாக்கு
1) இசையாசினால் கூறப்பட்டது (2) எரேமியாவால் கூறப்பட்டது
(3) மிக்கேயாவால் கூறப்பட்டது (4) தானியேலால் கூறப்பட்டது

22) தூதுப்பணிக்கென அனுப்பப்பட்ட அப்போஸ்தலர்பன்னிருவக்கும் கிறிஸ்து அதிகாரங்களைக் கொடுத்தது.
(1) அலகைகளைத் துரத்துவதற்காகும்
(2) நோயாளரைக் குணப்படுத்துவதற்காகும்
(3) இறை அரசை அறிவிப்பதற்காகும்
(4) மேற்கூறிய அனைத்திற்குமாகும்

23) சிலுவையில் தாம் ஒப்புக் கொடுத்த பலியில் நாம் பங்கு பெற கிறிஸ்து நாதர் நமக்கு அருளுவது
1) குருத்துவத்தின் மூலமாகும் (2) திருப்பலிப்பூசையின் மூலமாகும்
(3) நற்கருணையின் மூலமாகும் (4) திருமுழுக்கின் மூலமாகும்

24) அஞ்சாதீர்கள் நீங்கள் என்னைக் கெடுக்க சதியாலோசனை செய்தீர்கள்ஆனால் கடவுள் தீமையை நன்மையாக மாற்றினார் இவ்வாறு கூறியவர்?
(1) யோசேப்பு (2) மோசீசன் (3) யோவான் (4) யாக்கோபு

25) ''இப்பொழுது பசியாய் இருப்பவர்களே நீங்கள் பேறு பெற்றோர், ஏனெனில்-- ''இம் மேற்கோளை நிறைவு செய்ய கீழ் காண்பவற்றில் பொருத்தமானது
(1) ''நிறைவு பெறுவீர்கள் ,'என்பதாகும்
(2) சிரிப்பீர்கள் என்பதாகும்
(3) ''ஆறுதல் பெறுவீர்கள்''என்பதாகும்
4)) ''விண்ணரசை உரிமையாக்கிக் கொள்வீர்கள்''என்பதாகும்

26) இன,மத,குலம் பாராது மற்றவர்க்கு உதவ இயேசு எம்மை அழைப்பது
(1) பரிசேயனதும் ஆயக்காரனதும் உவமை மூலமாகும்
(2) விதைப்பவன் உவமை மூலமாகும்
(3) நல்ல சமாரியன் உவமை மூலமாகும்
(4) காணாமல் போன ஆட்டின் உவமை மூலமாகும்

27) ''இன்று இவ் விட்டிற்கு மீட்பு உண்டாயிற்று இவனும் ஆபிரகாமின் மகன் தானே'' என இயேசு கூறியது.
(1) நண்பனான இலாசா பற்றியாகும்
(2) சீமோன் என்னும் பரிசேயன் பற்றியாகும்
(3) சக்கேயு எனும ஆயக்காரன் பற்றியாகும்
(4) கொர்னேலியுஸ் எனும் நூற்றுவர் தலைவன் பற்றியாகும்

28) மிருகத்தின் இரத்தத்தினால் சீனாய் உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது எனினும் புதிய உடன் படிக்கை முத்திரையிடப்பட்டது;
(1) பலிப் பூசையில் ஒப்புக்கொடுக்கப்படும் காணிக்கைகளினாலாகும்
(2) அப்பத்தினாலும் இரசத்தினாலுமாகும்
(3) இறைமகனின் இரத்தத்தினாலாகும்
(4) பாஸ்கா செம்மறியின் இரத்தத்தினாலாகும்

29) கிறிஸ்தவ சேவைக்கு அழைக்கப்படுபவர்களில் இருக்க வேண்டிய முக்கிய இருபண்புகளாவன
(1) நல்ல உடல் ஆரோக்கியம்,உயர் கல்வி முதலியனவாகும்
(2) தணியாத ஆசை,சேவைக்கு அர்ப்பணிப்பு முதலியனவாகும்
(3) நல்ல குடும்பப்பின்னணி,சமுகத்தால் ஏற்றுக்கொள்ளப்படல் முதலியனவாகும்
(4) உயிருள்ள விசுவாசம்,தியாகம் முதலியனவாகும்

30] கடவுளுடைய அரசுமுதலில் வளரவேண்டியது
1) எம்குடும்ப அங்கத்தவர்களிலாகும் 2) பங்குக் குடும்பத்திலாகும்
3) எம் இதயங்களிலாகும் 4) நாம் சேவைசெய்யும் இடங்களிலாகும்

31] விரைவாக உன் கடமையைச் செய், நான் இன்னும் தாமதிப்பதை என் அன்பர் பொறுத்துக் கொள்ளமாட்டார் தணியாத அன்பொடு அவர் எனக்காக காத்து இருக்கிறார்'' இவ்வாறு கூறி மறைசாட்சி ஆனவர்
1) புனித சிசிலியம்மாள் 2) புனித அக்னெ சம்மாள்
3) புனித பெர்னபெத்தம்மாள் 4) புனித றீற்றம்மாள்

32] கிறிஸ்துவின் மறு வருகையை எமக்கு சம்பிரதாய பூர்வமாக நினைவூட்டுவது
1) பாஸ்காவுக்கு முன் காலத்திலாகும்
2) பாஸ்காவிற்கு பிற்பட்ட காலத்திலாகும்
3) கிறிஸ்து பிறப்பதற்கு முன்காலத்திலாகும்
4) கிறிஸ்து பிறப்பிற்கு பின் காலத்திலாகும்

33] முதற் பாவத்தில் இருந்து எம்மை மீட்டு, இறைவனின் பிள்ளைகள் ஆக்கும் திருவருட் சாதனம்
1) திருமுழுக்காகும் 2) திருமணமாகும்
3) நற்கருணையாகும் 4) நோயி பூசுதலாகும் (5ஆம் பக்கம் பார்க்க)

அட்டாளைச்சேனை

## ஐ.தே.க.கூட்டத்தில் குழப்பம் திகாமடுல்ல எம்.பி.மாய மறைவு

(கொழும்பு)

பொத்துவில் அட்டாளைச் சேனையில், கடந்த திங்கள் இரவு ஐக்கிய தேசியக்கட்சி பிரச்சாரக்கூட்டத்தில்இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, இடம் பெற்ற குழப்பத்தில் ஷேகு இஷாதீன் எம்.பி.யைக்காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

திகாமடுல்ல மாவட்ட எம்.பி.:ஷேகுஇஷாதீன் மேற்படி கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கையில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால்,கூட்டத்தில் குழுமியிருந்த மக்களும், மேடையில் வீற்றிருந்த பிரமுகர்களும்,ஆதரவாளர்களும் பயத்தால் கூக்குரலிட்டபடி சிதறிப் பதறி ஓடினர்.

சற்று நேரத்தில் அமைதி ஏற்பட்ட பின்பு பார்த்த போது, திகாமடுல்லமாவட்ட எம்.பி.யைக் காணவில்லை.

இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.எம்பியை தேடும்பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்;

இதேவேளை,

ஐக்கிய தேசியக்கட்சிக் கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க முயன்றவர்கள் யார் என்பது குறித்த திட்டவட்டமான முடிவெதுவும் அறிவிக்கப்படாத நிலையில்,பொதுஜன ஐக்கியமுன்னணிஆதரவாளர்களே இதனைப் புரிந்திருக்கலாம் எனும் கருத்தே மேலோங்கி நிற்கிறது.(உ)

முல்லைத்தீவில்

## நலிவடைந்த நிலையில் குழந்தைகள் பிரசவம்

### போஷாக்கின்மை காரணமாம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பில் போஷாக்கின்றி நலிவடைந்த நிலையில் பல குழந்தைகள் பிறந்திருப்பதாக தெரியவந்துள்ளது;

கடந்த மாதம் மேற்படி வைத்தியசாலையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின் பிரகாரம், 144 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் இவர்களில் 17 வீதமான குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

அத்துடன் சத்துக் குறைபாடு மற்றும் வயிற்றோட்டம் போன்ற பாதிப்புகளுக்குள்ளாகி4 குழந்தைகள் இறந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்மார் பலர் போஷாக்கின்றி, உடல்நலக்குறைவுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இத்தாக்கமே பிறக்கும் குழந்தைகளில் பிரதிபலிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே சமயம், முல்லைத்தீவு மாவட்டத்திற்கான சத்துணவுக்கென ஒதுக்கப்படும் நிதி உரிய வேளைகளில் அங்கு சென்று சேராமையே இதற்கு முக்கியமான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது;

(உ)

## விபத்துக்குள்ளான ஹெலியின் சிறியபாகம் கிராமவாசி கண்டெடுப்பு

(கொழும்பு)

அமைச்சர் அஷ்ரப் உட்பட பலர் பயணம்செய்தவேளை, அரநாயக்காப் பகுதியில் விபத்துக்குள்ளான உலங்கு வானூர்தியின் சிறிய பாகம் ஒன்றினை,அப்பகுதி கிராமவாசி ஒருவர் கண்டெடுத்து பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

அது,றாடருடன் தொடர்புபட்ட பகுதியென அடையாளம் காணப்பட்டுள்ளது;

மேலதிக விசாரணைகளுக்கென,இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் விமானப்படையினர் வசம் தற்போது இப்பகுதி ஒப்படைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே சமயம், உலங்கு வானூர்தியின் கறுப்புப்பெட்டியை தேடும்பணி தொடர்ந்தும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

[உ]

இம் மாதம் 7 ஆம்9 ஆம் திகதி வெளியாகிய கிறிஸ்தவ பகுதி - I வினாவின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 4 | 2) | 1 | 3) | 4 |
| 4) | 2 | 5) | 1 | 6) | 3 |
| 7) | 2 | 8) | 1 | 9) | 3 |
| 10) | 4 | 11) | 2 | 12) | 4 |
| 13) | 1 | 14) | 3 | 15) | 3 |
| 16) | 2 | 17) | 2 | 18) | 3 |
| 19) | 1 | 20) | 3 | 21) | 2 |
| 22) | 1 | 23) | 3 | 24) | 4 |
| 25) | 2 | 26) | 3 | 27) | 3 |
| 28) | 4 | 29) | 2 | 30) | 4 |
| 31) | 2 | 32) | 4 | 33) | 2 |
| 34) | 2 | 35) | 3 | 36) | 3 |
| 37) | 4 | 38) | 2 | 39) | 4 |
| 40) | 2 | | | | |

## தபாலில் பிரச்சார துண்டு பிரசுரங்கள்

[மானிப்பாய்]

யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அரச ஊழியர்களுக்கு தனித்தனியாக முகவரியிட்டு தமது தேர்தல் விஞ்ஞாபன பிரசுரங்களையும் வேட்பாளர் பட்டியல்களையும் தபாலில் அனுப்பி வருகின்றனர். (த-120)



பாராளுமன்றத் தேர்தல் யாழ். மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட, தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

தமிழர் விடுதலைக் கூட்டணி

(அ-812)

## இன்று ஒரு தகவல்

# விவேகமாய் வாழ்ந்தால் வெற்றி உன்பக்கம்

சங்காதேவி பிரவாசமாக ஓடிக்கொண்டிருக்கிறாள். இராமன், விசுவாமித்திரர், லட்சுமணன் இம்மூவரும் கங்கைநதியைகடந்து அக் கரைசெல்ல ஓடத்தில் ஏறினர்.

இராமபிரான் ஓடத்தில் ஏறுமுன் ஓடக்காரன் அவரை அவருடைய பாதங்களைப் புழுதியில்லாமல் நன்றாகக் கழுவிக்கொண்டபிறகே ஓடத்தினுள் ஏறவேண்டுமென்று பணிக்கிறான்.

'எதற்காக இப்படிக்கூறுகிறாய்?' என்று விசுவாமித்திரர் ஓடக்காரனைக் கேட்கிறார். 'எம்பெருமானின் பாதத்துளிகள் பட்டவுடனே கல், அகலிகையாக உருவெடுத்தது அதபோல இந்த ஓடமும் ஓர்அழகிய பெண்ணாகிவிட்டால் நான் எப்படி இரண்டுமனைவிகளை வைத்துக்கொண்டு சமாளிப்பேன்' என்றானாம் அந்தஓடக்காரன்.

படகோட்டியின் புத்திசாலித்தனமான பதிலைக்கேட்டு வியந்தஇராமன் அக்கரை போய்ச் சேர்ந்தவுடன் அவனுக்கு ஒருமோதிரத்தை பரிசாகக்கொடுத்தார்.

மோதிரம் தனக்குவேண்டாம்என்று கூறியபடகோட்டி 'தொழிாளி இன்னொரு தொழிலாளியிடமிருந்து கூலி வாங்கிக்கொள்வது பழக்கமில்லையே' என்றான்.

இராமனுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'இவன் எப்படித் தன்னையும் தொழிலாளி என்று சொல்கின்றான்?' சிந்தித்துப்பார்த்தார் பதில் புலப்படவில்லை.

என்றைக்காவது இராமன் தனியாக வந்து இங்கு படகை ஒட்டியிருப்பானோ! அதனால் தான் படகோட்டி,இராமனையும் ஒரு படகோட்டியாகக் கருதுகிறான் போலும் என்று விசுவாமித்திர முனிவரும் இலக்குவனும் நினைத்தனர்.

''இராமனை நீஎப்படிதொழிலாளி என்று சொல்கிறாய்?'' என்று கேட்டார் விசுவாமித்திரர்,படகோட்டியை பார்த்து.

''இராமன் எங்கள் குலத்திற்குத் தலைவன் கங்கைக்கரையில் வரும் பிரயாணிகளை ஓடத்திலேற்றிக் கொண்டு அக்கரை சேர்ப்பது எங்களுடைய தொழில்,ஆனால் இவர் சம்சாரம் என்ற சமுத்திரத்தில் அவருடைய பாதக் கமலங்கள் என்ற ஓடத்தைக் கொண்டு மனிதர்களை மோட்சமென்ற கரைக்குக் கொண்டு போய்ச்சேர்க்கிறாரல்லவா! இவரும் ஒரு தொழிலாளிதானே என்றான்!'' ஓடக்காரனுடைய விவேகத்தைப் பார்த்து முனிவரும் இராமலட்சுமணர்களும் மட்டற்ற உவகையடைந்தனர்.

நன்றி- ஞானபூமி

# கொக்குவில் இ. ஆ. பா. அதிபர் படையினரால் விசாரிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவு தினமான நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் திலீபனின்தியாகத்தைவெளிப்படுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக ஒட்டப்பட்ட சுவரொட்டி தொடர்பாக அங்கு சென்ற படையினர் மேற்படி பாடசாலை ஆசிரியர்களை வெளியேறச் சொல்லிவிட்டு அதியர் அழகரெட்ணத்தை விசாரித்ததாகவும் தெரியவருகிறது

இதேவேளை இச்சுவரொட்டி தொடர்பாக யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயகாவலாளியும் படையினரால்விசாரிக்கப் பட்டுள்ளார். (ந)

# நவராத்திரி பூஜை ஆரம்பம்

(மலையகம்)

கோண்டாவில் சமூண்டீஸ்வரி வளாகவீதி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு நவராத்திரி பூஜை ஆரம்பமாகின்றது. (செ-ப-14)

* * *

(நல்லூர்)

திருநெல்வேலி ஆடிய பாதம் வீதி அரசடி ஸ்ரீ சிவகாமியம்மன் ஆலயத்தில இன்று வியாழக் கிழமை பி.ப. நவராத்திரி பூஜை ஆரம்பமாகின்றது. (செ-103)

* * *

(நல்லூர்)

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. அம்பாள் கொலுப் பூசையந்திர பூசை ஹோமம் என்பவற்றுடன் நவராத்திரி பூஜை ஆரம்பமாகின்றது. (செ-103

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ் பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 7ம் திகதி சனிக்கிழமை மு.ப. 10. 45 மணிக்கு இரதோற்சவமும், 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (செ)

# கண்காணிப்புகுழு யாழ். வரும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்மாவட்டத்தேர்தல் நிலைமைகளைக் கண்காணிப்பதற்கு சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களைக் கொண்ட தேர்தல்கண்காணிப்பாளர்குழு எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந - 2)

## நவராத்தி நாயகியை வலம்புரியில் வழிபடுவோம்



### அருள் பொழிவாய் . . . !

ஆண்டுச் சுழற்சியிலே அம்பிகைக்கு அபிஷேகம்
ஆட்லறி ஷெல் நடுவே ஆயுத பூஜையம்மா
அசுர வெறி நீக்கி அன்பு நெறி தழைத்தோங்க
அருள் மழை பொழியுமம்மா

அ. மந்தாகினி தரம்-10
யா/இராமநாதன் கல்லூரி

* * *

### மூன்று நாட்கள்

கொலு ஒன்று வைத்து கும்பிட்டு அருள் பெறுவோம்
வீரத்தின் விளக்காம் துர்க்கைக்கு மூன்று நாட்கள்
செல்வத்தின் தேவியாம் லட்சுமிக்கு மூன்று நாட்கள்
கலைமகளாம் அன்னையிற்கு கடைசி மூன்று நாட்கள்

செ. கார்த்திகா தரம்-6
யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்

* * *

### பக்தி இருந்தால்

சக்தி இருந்தால் சிவன் இருப்பார்
புத்தி இருந்தால் கல்வி சிறக்கும்
சித்தி இருந்தால் பட்டம் வரும்
பக்தி இருந்தால் அருள் கிடைக்கும்

ச. பிருந்தாஜெனி
யா/யூனியன் கல்லூரி

* * *

### நவராத்திரி வருக

செல்வம், வீரம், கல்வி மூன்றையும் வேண்டிட
தேவியர் மூவரையும் போற்றி வணங்கியே
புரட்டாதி திங்களில் வரும் ஒன்பது இராத்திரிகளே
வருக வருகவென வரவேற்போமே

வி. அருளினி
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

* * *

### பெருவிழா!

நவராத்திரி ஒரு விழா
முப்பெருந் தேவியர்க்கு திரு விழா
கல்விமான் செல்வர் வீரர்க்கு அது விழா
ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் பெரும்விழ

செ. கஜன தரம்-7
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

* * *

நவராத்திரி பூசை கவிதைமாலை முதலாம் நாள்இன்று
வீரத்தாய் துர்க்கையின் புகழ் விளங்கும் நாள்

# தேர்தலை கண்காணிக்க செய்தியாளர் நியமனம்

(வவுனியா)

வன்னிமாவட்டத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு வவுனியாவைச் சேர்ந்த இரு செய்தியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தினால் செய்தியாளர்களான பி. மாணிக்க வாசகம், ரி. விவேகராஜா ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (வ)

## கிறிஸ்தவம...

34] பரிசுத்த ஆவி எம்மில் செயலாற்றுவது
1) ஆயர் மூலமாகும் 2) திருச்சபை மூலமாகும்
3) உறுதி பூசுதல் மூலமாகும் 4) திருமுழுக்கின் மூலமாகும்

35] இயேசு நசரேத்தூர் செப கூடத்தில் வாசித்த ஏட்டுச்சுருள், எந்த இறைவாக்கின் தொடர்புடையது
1) ஆமோஸ் 2) எரேமியா 3) தானியேல் 4) ஏசாயா

36] திருச்சபை எனும் கிறிஸ்துவின் மறையுடலின் உயிர்மூச்சு... கீழ் காண்பவற்றுள் மேற்காணும் வெற்றிடத்திற்கு பொருத்தமாய் அமைவது
1) பரிசுத்த ஆவியாகும் 2) இயேசுவாகும்
3) இறைமக்களாகும் 4) கிறிஸ்தவ பக்தர்களாகும்

37] ''உழைக்க மனமில்லாதவன் எவனும் உண்ணலாகாது'' என புனித சின்னப்பர்
1) கொலோசியருக்குக் கூறினார் 2) உரோமையருக்குக் கூறினார்
3) தெசலோனிக்கேயருக்குக் கூறினார் 4) கொரிந்தியருக்கு கூறினார்

38] புனிதலூக்காஸ் தனது நற்செய்தியை... மொழியில் எழுதினால் இதில் இடைவெளிக்கு பொருத்தமாய் அமைவது
1) எபிரேய 2) கிரேக்க 3) அரமேய 4) இலத்தீன்

39] புனிதலூக்காஸ் தனது நற்செய்தியின் அடையாளமாக அமைவது
1) மனிதன் 2) எருது 3) சிங்கம் 4) கழுகு

40) நாம் உயிருள்ள இறைவனின் ஆலயமாவது
1) திருமுழுக்கின் வழியாக 2) உறுதி பூசுதலின் வழியாக
3) திவ்விய நற்கருணையைப் பெறுவதின் வழியாக
4) குருத்துவத்தின் வழியாக



சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும்
அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிக்க
தோடம்பழம் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுயேச்சைக் குழு-1 X


தர்மராஜா வில்சன்
(சி-827)

# இஸ்ரேல் பிரதமர் இல்லத்தில் யஸீர் அரபாத் உரையாடினார்

(டெல்அவிவ்)

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கு இடையில் மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த திங்கள் இஸ்ரேல் பிரதமர் எகிட்பாராக்கும் பாலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தும் கலந்து கொண்டனர்.

இஸ்ரேலியப் பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற ப் பேச்சு வார்த்தை மிகவும் எளிய முறையில் நடைபெற்ற தாகவும் இது ஒரு முன்னோடிக் கலந்துரையாடலென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஹாம் டேவிற் பேச்சு வார்த்தைக்குப் பிறகு இரு தலைவர்களும் மத்திய இஸ்ரேலில் சந்தித்து இப்பொழுது தான் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்கள்.

இஸ்ரேல் பிரதமரும் பாலஸ்தீன அதிபரும் விரைவில் தனித்தனியே அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார்களென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## சிட்னி ஒலிம்பிக் பார்வையாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வண்டுகள்

(கான்பரா)

அவுஸ்திரேலிய சிட்னி நகரில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளை கண்டு களிக்க வந்திருக்கும் ஆர்வலருக்கு, அங்கு உலவும் ஒருவித வண்டுகள் பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக ஒளி அமைப்பு ஏற்பாடே இவ்வண்டுகள் அங்கு பிரசன்னமாகி, பார்வையாளர்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்த காரணம் என நம்பப்படுகிறது.

இவற்றை அழித்து, பார்வையாளர்களுடைய அசௌகரியங்களை போக்குவது தொடர்பாக உயிரியல் நிபுணர்களுடன் கருத்துப்பரிமாற்றம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், இரசாயன மருந்துகளை பாவித்து இவ்வண்டுகளை அழிப்பதால், பார்வையாளர்களுக்கு ஏதாவது தாக்கம் ஏற்படலாம் என்று நிலவிய கருத்தின் பேரில், இரசாயன மருந்துப் பாவனை மூலம் வண்டுகளை அழிக்கும் முறை கேள்விக்குறியான நிலையில் உள்ளதாகவும் அறியமுடிகிறது. (உ)

## தலை அகன்று பருமனாக உள்ளவர்கள் நிரம்ப புத்திசாலிகளாம்

(இலண்டன்)

தலை அகன்று சற்று பருமனாக உள்ளவர்கள் நிரம்ப புத்திசாலிகளாம்.

இவ்வாறு பிரிட்டன் பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 தொடக்கம் 35 வயதிற் கிடைப்பட்ட பல நூற்றுக்கணக்கானோரிடையே நடத்தப்பெற்ற ஆய்வுகளின் பிரகாரம், தலை அகன்று சற்றுப் பருமனாக உள்ளவர்களுக்கு அறிவு அதிகம் எனும் புதிய தகவல் வெளியாகியுள்ளது. (உ)

# 15 இலட்சம் எலிகளைக் கொல்ல 27 ஆயிரம் அமெ. டொலர் செலவு

### வாலைக் கொண்டுவருபவர்களுக்கு பணமாம்

[ஹோசிமின்]

வியட்நாமில் இவ்வாண்டு 15 இலட்சம் எலிகளைக் கொன்றுள்ளதாக அரச தகவல் அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

அத்தகவல் மேலும் தெரிவிக்கையில்; பயிர்வகைகளையும் மற்றும் வீட்டுக் கொல்லைப்புறங்களையும் அண்டிய பகுதிகளில் இவ் எலிகள் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாகவும் குறிப்பாக சுகாதாரக்கேடுகளை விளைவிக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எலி அழிப்பிற்காக அரசாங்கம் 27 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவாகியிருக்கிறது என்றும் எலிகளை கொன்றுவிட்டு வால்களை கொண்டுவருபவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படுவாதாகவும் வீடுகளில் பூனைகளை வளர்க்கும் திட்டம் நல்ல பயனைத் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## பாகிஸ்தானுக்கு எதிராக பங்களாதேஷ் ஆர்ப்பாட்டம்

(டாக்கா)

பாகிஸ்தான் மன்னிப்புக் கேட்க வேண்டும் இல்லையேல் பங்களா தேஷிலுள்ள தனது தூதரகத்தை உடனடியாக மூட வேண்டும் என்று புரட்சியாளர்கள் எச்சரிக்கை விட்டுள்ளார்கள்.

1971 இல் பாகிஸ்தான் தரப்பினர் பங்களாதேஷில் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளுக்கு மேற்படி மன்னிப்புக் கேட்க வேண்டும். என்று பாகிஸ்தான் தூதரகம்முன் பங்களாதேஷ் விடுதலைப் போராளிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். (து)

# மேற்கு வங்கத்தில் பெருவெள்ளம் 700 பேர் பலி; மக்கள் இடம்பெயர்வு

(மும்பாய்)

மேற்கு வங்கத்தில் தொடரும் அடை மழை வெள்ளத்தால் இது வரை 700 பேர் இறந்துள்ளனர், 1 கோடியே 50 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

10 நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும் 12 நாட்களாக விமானம்மூலம் போடப்படும் உணவுகள் போடப்படவில்லையென்றும் அநேகர் உணவின்றி இறந்திருக்கலாமென்றும் மற்றும் நோய்களாலும் வெள்ளத்தால் அடிபட்டும் இறந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு இழந்த வீடுகளைத் தேடிப்பிடிப்பதே பெருந்தொல்லையாக இருப்பதாகவும் உதவிப்பணிகள் தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## வீட்டுக்காவலில் உள்ள மியன்மார் எதிர்க்கட்சித் தலைவியை பிரி. தூதுக்குழு சந்திக்க அனுமதி மறுப்பு

(பர்மா)

மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூகி அம்மையாரை சந்திப்பதற்கு மியன்மார் இராணுவ அரசு பிரிட்டன் தூதுக்குழுவுக்கு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

மியன்மார் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் தூதுக்குழுவினர், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவியைச் சந்திக்க அனுமதி கோரியிருந்தனர்.

மேற்படி கோரிக்கைக்கே இராணுவ அரசு அனுமதி மறுத்துள்ளது.

இதனையடுத்துமிகவும்இரகசியமான இடத்தில் எதிர்க்கட்சித்தலைவியை தடுத்து வைத்திருக்கும் மியன்மார் அரசின் அடாவடித்தனம் குறித்து உலகெங்கணும் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன. (உ)

உலக தரிசனம்

## புதுடில்லியில் பெரியார் மண்டபம்

(புதுடில்லி)

மறுமலர்ச்சித் தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதற்காக புதுடில்லியில் பெரியார் இல்லமொன்றினைத் தொடங்க இருப்பதாக திராவிடக் கழக வீரமணி தெரிவித்தார்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை இந்த இல்லம் திறக்கப்பட இருப்பதாகவும் இதிலுள்ள பளிங்குச் சிலையை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் மூப்பனார் திறந்து வைப்பாரென்று வீரமணி தெரிவித்தார்.

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தை சேர்ந்த அன்பர்கள் இந்தஇல்லத்தை அமைத்ததாகவும் இதில் டில்லி முதல்வர் போன்ற அரசியல் தலைவர்கள் கலந்து கொள்வார்களென்றும் திராவிடக் கழகத் தலைவர் வீரமணி தெரிவித்தார். (து)

## பாகிஸ்தான் பயங்கரவாத நாடே அமெரிக்க அதிபர் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

இந்தியாமீது பயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் பாகிஸ்தானை பயங்கரவாத நாடாகப் பிரகடனப்படுத்தப்போவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்காவின் மேற்குப் பிரதேசத்தில் ஜனாதிபதி தேர்தலுக்காக நிதிதிரட்டும் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துகையில்,

இதேகூட்டத்தில் இந்திய அமெரிக்க அரசியல் திட்டத்தை ஆக்கிய தலைவர் கினி ஒகே பேசியது குறிப்பிடத்தக்கது.

அக்கூட்டத்தில் கலந்து கொண்ட மேலும்பல பேச்சாளர்கள் உலக பயங்கரவாதத்தை சுட்டிக்காட்டிப் பேசியதாக தெரிவிக்கப்படுகிறது. (து)

## றோமன் கத்தோலிக்க திருச்சபை புனித கத்தோலிக்கரை நியமிப்பதை சீனப் பேராயர்கள் கண்டிக்கிறார்கள்

(பீஜிங்)

சீனதேசம் ஏகாதிபத்திகளால் தாக்கப்பட்ட போது அவர்களுக்குஉதவியவர்க்கும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கும் புனித கத்தோலிக்கர்கள் என்று றோமன் கத்தோலிக்கத் திருச்சபை நியமிக்க இருப்பதை சீனகத்தோலிக்க பேராயர் குழு செய்தியில் கண்டித்துள்ளது.

இச் செயலானது சீனகத்தோலிக்கர்களையும் நாட்டுப்பற்றுடைய சீனர்களையும் புண்படுத்துவதாகவும் சீன தேசிய இனத்துக்கு துன்பம் விளைவிக்கும் செயலென்றும் அந்தக் கட்சி பொதுச் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

புனித கத்தோலிக்கர்களை நியமிக்கிறோம் என்ற சாக்குப் போக்கில் இதனைச் செய்வது சீனக்கத்தோலிக்க மதத்தை மாசுபடுத்தும் செயலென்றும் வரலாற்றைமாற்றி அமைக்கும் செயலென்றும சீன நாட்டுப் பற்றுள்ள கத்தோலிக்க சபையும் பேராயர் சங்கமும் கண்டனங்கள் தெரிவித்துள்ளன. (து)

## புதிய ஏவுகணை கண்டுபிடிப்பு

(பாகிஸ்தான்)

பாகிஸ்தான் 500 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும் புதிய ஏவுகணை ஒன்றினை தயாரித்துள்ளது.

இவ் ஏவுகணையை தயாரிக்க 3 மாதம் செலவிட 2 ஆண்டுகள்வேண்டியுள்ளதாக பாகிஸ்தான் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஏவுகணை இது வென்பது குறிப்பிடத்தக்கது. (து)

## ஜூனியர் புஷ்ஷிற்கு ஆதரவு அதிகரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சித்தலைவர் ஜூனியர் புஷ்ஷிற்கு கூடுதலான ஆதரவு கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)


சுயேச்சைக் குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி)

★ ஸ்ரீமாவோ அம்மையாரின் விவசாயக் கொள்கைகளை மீண்டும் அமுல் நடத்துவோம்!

★ இழுத்து மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்போம்!

முதன்மை வேட்பாளர்

வேல்முருகு தங்கராசா



(௮-௦௦௧)

எமது வாக்கைத் தொலைபேசிக்கே அளித்திடுவோம்

முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்
-குறள்-

வலம்புரி

## என் கேள்விக் கென்னபதில்.

தமிழர்பிரச்சினை அனுமன் வால் போல நீண்டு கொண்டு போகிறது பேரின வாதிகள் தங்களுக்குள்ளே போட்டி போட்டுக் கொண்டு சல்லாப மொழி பேசி சலிப்படைய வைக்கிறார்கள். நீதியமைச்சர் சிறுபான்மை மக்களையே நம்பியிருக்கின்றேன் என்று தகைமைக்கு ஒவ்வாது தளம்புகிறார். அல்லது தப்புத்தாளப் போடுகிறாரோ தெரியாது. இவ்வாறு அரசியல் சூறாவளி அடித்து முறிக்கிறது.

ஜனநாயகம் பேசும் நாடு. இல்லை ஜனநாயகப் வாழும் நாடாம். ஆபிரகாம்லிங்கன் இன்றிருந்தால் தற்கொலை புரிந்திருப்பார். மக்களால் மக்களுக்காக, மக்களின் ஆட்சிச்சிறப்பே ஜனநாயகம் என்றான். இங்கு எந்த நாயகமும் இன்றி நாசம் பண்ணப்படுகிறது ஒரு கண்மூடி ஒரு கண் விழிக்கின்ற நிலை செங்கோன்மைக்கு ஊறு விளைவிப்பதாகும்.

தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகளில்லையா? என்று ஏக்கத்தோடுகேட்க வேண்டியிருக்கு. ரணில் ஐயா என்கேள்விக்கென்ன பதில் என்றுகேட்கின்றார் அம்மாவை நோக்கி மாறி மாறி மறித்து விளையாடாமல் திறந்த வெளிச் சிறையில் தமிழரை வாட்டாமல் நீதியை நிலை நாட்டுங்கள். அவர்களை அவர்கள் மட்டத்திலாவது வாழவிடுங்கள என்று நைந்த பட்ச நிலையில் குரல கொடுக்கும் நிலை இன்றைய பரிதாப நிலை.

விடியலை நோக்கிவிரையும் பயணத்தின் உயிர் நாடி ஒன்று எனப் பாரதிதாசன் கூறிப் பல கால மாச்சு. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என்று தான் வீம்பு பேசினான். ஆனால் அரசியல் சகதியில் வீழ்ந்துகுளிப்பதால் செவிப்பறை சிதைந்ததோ, சிந்தை ஒழித்துக் கொண்டதோ வென விசனிக்கவேண்டியிருக்கு.

இன்றைக்கு தமிழன் வாழும் பிரதேசங்கள் சுடுகாடு போல் காட்சியளிக்கிறது. நாடா பிணக்காடா என்று ஏங்க வேண்டியிருக்கு. உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டமக்கள் எத்தனை? மன நோய் வைத்தியசாலைகள் திறந்து விடப்பட்டது போல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் மனக்குறையோடு வாழ்வை வாழ்ந்து தொலைக்கிறார்கள்.

# அகிலத்தை ஆட்சி செய்யும் அன்னைபராசக்தியை நாளும் பணிந்து அருட் கடாட்சம் பெறுவோம்

புவி ஏழையும் பூத்தவள் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாக விளங்கும் அன்னை பராசக்தியே! கருணையே வடிவான போக மோட்ச பிரதாயினி ஆகிய அம்பிகையை இன்றிலிருந்து தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கு நடைபெறும் விசேட நவராத்திரி நாட்களில் சரணடைந்தால் இடர்களின்றி தூய எண்ணங்களுடன் வாழ நாம் வழிதேடலாம். அவளை அவள் கருணையாலேயே அடையலாம். அந்தக் கருணையைப் பெறும் வழிகள் கும்பத்திலும், விம்பத்திலும், ஸ்தம்பத்திலும் அம்பிகையைப் பூசித்தலாகும்.

### அன்னையின் விரதங்கள்

அன்னை தன்னை வழிபட்டுய்யுமாறு எமக்களித்தவிரத நாட்கள் சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம், ஸ்வர்ண கௌரி விரதம், சாவித்திரி கௌரி விரதம், வரலட்சுமி விரதம், காரை நோம்பு என்பனவாகும்.

இத்தகைய விரதங்களுள் அனைத்து இந்துமத மக்களாலும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வரும் விரதமே நவராத்திரி விரதமாகும்.

### வீரத்தாய்

''எழுமின் விழிமின் கருதிய கருமம் கைகூடுமவரை உழைமின்'' என்று வீர முழக்கம் செய்தார் சுவாமி விவேகானந்தர் ஆற்றல் இல்லையேல் வாழ்க்கை இல்லை. ஆற்றலை வளர்ப்பதே மனித வாழ்க்கையின் செயற்பாடுடன் கூடிய நோக்கமாக இருக்கவேண்டும்.

ஆற்றல்வளம்பெற அன்னை பராசக்தியின் அருள் வடிவான துர்க்கையின் கடாட்சம் வேண்டும் ஆகவே மனித வாழ்விற்கு மிகமிக இன்றியமையாத இந்த வீரப்பண்பை வேண்டி அன்னை பராசக்தியை துர்க்கையாக வழிபடும் தன்மை இன்று தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களிலும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

### செல்வலட்சுமி

பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை, தான தருமங்கள் இல்லை. இவ் வாழ்க்கைக்கு வேண்டிய பொன்னையும் பொருளையும் அருளுபவள் இலக்ஷ்மிதேவி. அவளின் கடைக்கண் பெறவேண்டிப் போற்றுவதும் நமது தலையாய கடமையாகும். எனவே தான் நவராத்திரியின் நான்காம் நாள் தொடக்கம் ஆறாம் நாள்வரை அன்னையைப் போற்றி வழிபட்டு வருகின்றோம்.

### கலைவாணி

ஆற்றலும் பொருளும் இணைந்த வழி அறிவிலலையேல் வாழ்க்கையின் உண்மை பற்றிய தெளிவு ஏற்படாது. ஆகவே அறிவுத் தாயாகிய கலைவாணியை வணங்கித் தொழ வேண்டியது நமது நித்தியமாகின்றது. எனவே நவராத்திரியின் ஈற்றில் உள்ள மூன்று நாட்களும் தேவி சரஸ்வதியை பணிந்து வணங்க வேண்டும்.

★ நரேன் ★

### தேவியின் சிறப்பு

தாயானவள் பால் நினைந்தூட்டுபவள். அவள் நினைந்து ஊட்டும் பால் அவளது கருணையின் வெள்ளம். அந்தக் கருணை வெள்ளமே நாம் மாந்தர்களாக வாழ்வதற்கான அன்புப் பயிரை வளரச் செய்து எம்மை வாழவைக்கின்றது.

அன்னை பராசக்தியானவள் எங்கும் எப்போதும் இருந்து நம்மை எல்லாம் வழிநடத்துகின்றார் என்றும் அவளே இன்பத்தைக் கொடுப்பவள், துன்பத்தை நீக்கி சுகத்தை கொடுப்பவள், கடன் தொல்லைகளில் இருந்து நம்மை மீட்பவள், என்றும் உபநிடதங்கள் கூறுகின்றது. ஆதியில் தோன்றியவளும், உலகத்தைப் படைத்தவளும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோரைத் தோற்றுவித்தவளும் தேவியே என்று சாகரர்களால் கூறப்பட்டு வருகின்றது.

### அன்னையின் அடைக்கலம்

அன்புடைமையேவாழ்க்கை ஆற்றல், செல்வம், அறிவுரை என்பவற்றின் பூரண வளர்ச்சி நிலையே அன்பின் வெளிப்பாடாகும். எனவே தான் அன்னை பராசக்தி என்றும் நாம் அவளை அன்புடன் பணிந்தேத்தினால் அவளருளால் அனைத்தும் எமக்குக் கிடைப்பதில் ஐயமில்லை.

# தென்மராட்சிப் பகுதியில் தொடரும் இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்கு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் ஸ்ரீகந்தா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியில் தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்துவதற்கு ஐரோப்பிய யூனியன் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இருவருடன் ஜீ ரி. சற் நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போது ரெலோ இயக்கத் தலைவர் நல்லையா ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் தென்மராட்சி மற்றும் ஏனைய பகுதிகளில் தொடரும் இராணுவ நடவடிக்கையினால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் மேலும் இராணுவ நடவடிக்கைகள் தொடருமானால் மோசமான விளைவுகளே ஏற்படும்.

தேர்தல் நடைபெறும் வேளையிலும் கூட இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன.

மேலும் இவ்வாறான யுத்த சூழ்நிலையில் ஜனநாயக ரீதியான ஒரு தேர்தலை நடத்துவதும் சாத்தியமானதாக தெரியவில்லை.

இது விடயம் உரியவர்களுக்கு சமர்ப்பித்து வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் நம்பகரமாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## காரியாலயம் எரிக்கப்பட்டதற்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்

### அனுரா கூறுகிறார்

(கொழும்பு)

அத்தனகலயில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஐக்கிய தேசியக்கட்சி மீது தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறது அத்தனகலயில் எனது காரியாலயம் நேற்றுக் முன்தினம் காலைஎரிக்கப்பட்டுசேதமாக்கப்பட்டுள்ளது. என்று நேற்று முன்தினம்நடத்தியபத்திரிகையாளமாநாட்டில்அனுராபண்டாரநாயக்க கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக் காரியாலயத்தில் நடந்த அம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

எனது தந்தையின் 41 வது சிரார்த்த தினத்தை முன்னிட்டு அப்பகுதி முழுமையான பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். எனவே எனது காரியாலய எரிப்புக்கு ஜனாதிபதியே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

கே. பி. இரத்நாயக்க, லக்ஷ்மன்ஜெயக்கொடிபோன்றோர் அரசில் இருந்து புறந்தள்ளப்பட்டுள்ளனர்.

இச்செயலானது பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதையே எடுத்துக்காட்டுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் (வ)

இன்றைக்கு மக்கள் வேண்டி நிற்பதெல்லாம் யுத்த நிறுத்தம். அகோர சத்தங்கள் அற்ற சாந்த நிலை. கஞ்சி குடித்தாலும் அஞ்சாத வாழ்வு. கெஞ்சி வாழும் கீழ்மை நிலை வேண்டாம். எம்மை வாழ விடுங்கள் என்றே குரல் எழுப்புகிறார்கள்.

**அன்புடன் ஆசிரியர்**

## இரவு தபால் புகையிரதத்தில் நகைகள் கொள்ளை

திருகோணமலையிலிருந்து கொழும்பு வந்த இரவு தபால் புகையிரதத்தில் பணம் ஆபரணங்கள் இனம் தெரியாதவரால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

சி.ஐ.டி பொலிஸார் என தம்மை அறிமுகம் செய்து கொண்டவரிடம் பணத்தையும், ஆபரணத்தையும் பறிகொடுத்த திருமலை வாசிகள் கோட்டை புகையிரத நிலைய பொலிஸில் புகார் செய்துள்ளனர். (வ)


## தென்மராட்சி மோதலையடுத்து 3449 பேர் வன்னி சென்றனர்

(கொழும்பு)

யாழ். குடாவின் தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதலை அடுத்து சுமார் 1167 குடும்பங்களைச் சேர்ந்த 3449 பேர் குடாக்கடலூடாக வன்னிப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்து சென்றவர்களில் ஒரு தொகுதி மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## சாயி அருளமுதம்



### சுயநலம்

வாழுங்காலம்முழுவதும் சுயநலமே மூச்சாகஇருக்கிறது. சுயநலத்தை எப்போது தியாகம் செய்யப்போகிறோம்? ஆன்மீகத்தை எப்போது புரிந்த கொள்ளப் போகிறோம்? உலகம் தொடர்பான எண்ணங்களைக் கைவிட்டால் தான். ஆன்மீகம் தொடர்பான எண்ணங்கள் நம்மை வந்தடையும். இளமைப் பருவத்தில் நேரான வழியில் சென்றால். இறைத் தன்மையைப் பெறுவோம். சமூகத்தில் பிறகு நன்கு அளவளாவிப் பழகுவோம்.


ஆகவே மனிதவாழ்வு தெய்வீகமானது வெறும் உணவை உண்டு, உடலை மட்டும் வளர்த்து வாழ்க்கையை நடத்தலாகாது. நாம் இந்த உடல் மனம், புத்தி, இவற்றை தெய்வீகம் என்று கருத வேண்டும். இவற்றின் தொடர்பாக தெய்வீகஉணர்வுகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்,

பாபா

யோகுசான நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் பிடிப்பகம்



## 27ஆவது ஒலிம்பிக் போட்டி



### அரையிறுதிப் போட்டிக்கு சுசந்திகா தெரிவானார்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியின் 12 ஆவது நாளான நேற்று நடைபெற்ற கால்ப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் கமறூனும், ஸ்பெயினும் தெரிவாகியுள்ளது.

இது வரை நடை பெற்ற போட்டிகளின் அடிப்படையில் அமெரிக்கா 63 பதக்கங்களையும், ரஷ்யா 51 பதக்கங்களையும், சீனா 50 பதக்கங்களையும் பெற்று முன்னணி வகிக்கின்றன:

பெண்களுக்கான 200 மீற்றர் அரையிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இலங்கையின் ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க பெற்றுள்ளார். (ந-2)

### ஜேர்மனியில் ஈழத்தமிழர்களின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(லண்டன்)

ஜேர்மனியிலுள்ள மோர்ஸ் தடுப்பு முகாமில் இம்மாதம் 4ந் திகதி முதல் சாகும் வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டிருந்த ஈழத்தமிழர்கள் நால்வரும் நேற்றுடன் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

உண்ணா விரதத்தைக் கைவிடுமாறு ஜேர்மனியின் உல்லாச அமைச்சைச் சேர்ந்த பெண்மணியொருவர் கேட்டுக்கொண்டதையடுத்தே இப்போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

#### கொடிகாமம்,......

கொடிகாமம் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் கணபதிப் பிள்ளை யோகலிங்கம் (வயது 53) அவரது மகள் யோகலிங்கம் தமிழரசி (வயது 23) ஆகியோரும், வரணிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இராசதுரை கலைமணி (வயது 46) என்ற ஆறு பிள்ளைகளின் தாயாருமே பலியானவர்களாவர்.

யோகலிங்கம் பரமேஸ்வரி (வயது 48), யோகலிங்கம் மனுசுதன் (வயது 16), திருக்குமரன் இந்திரலேகா (வயது 27), கதிர்காமநாதன் லலிதா (வயது 18) ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஷெல் வீச்சில் பலியானவர்களின் சடலங்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்களை பருத்தித்துறை மாவட்ட நீதிபதியின் உத்தரவின் பேரில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை செய்தார் பிரேத பரிசோதனையின் பின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(வ-2-52)

#### மிக...

துள்ளமை குறித்து அந்தந்தப் பகுதி மக்களும் சன சமூக நிலையங்களும் ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி.கே.ஜெகன். பிரதி அமைப்பாளர் க. மணி பல்லவராஜன் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து இவ் வீதிகள் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ந)

#### இளாலியில்...

கணைவீச்சுக்களுடன் கடுமையான மோதலில் இரு சாராரும் ஈடுபட்டு வருவதாகவும் இப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளைவீசுவதனால் அப்பகுதிஎங்கும் அதிர்ந்த வண்ண முள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது

இம்மோதலில் இருதரப்பிலும் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

#### வாகன...

மானார்.

1986 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம்கோட்டை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக கொத்தலாவல இருந்தபோது சடலம் ஒப்படைப்பது தொடர்பாக யாழ்.நகர் வந்து விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டுவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

1993 ஆம் ஆண்டில் இராணுவப் பயிற்சிக்காக அமெரிக்கா சென்ற இவர்திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு நாடு திரும்பிய வேளை பதவி நீக்கப்பட்ட நிலையில் தனியார் பாதுகாப்புச் சேவை ஒன்றை நடத்தி வந்தார்என்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது. (வ-உ)

# பாதாள உலகக் கோஷ்டியினருக்கு பிக்குகள் இடங்கொடுக்கவில்லையா?

## யோகராஜன் எம். பி கேள்வி

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் உள்ள இந்து குருமார் இந்து ஆலயங்களில் விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் கொடுப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே கருதினால் இங்குள்ள விகாரைகளும், பெளத்த துறவிகளும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு புகலிடம் கொடுப்பதாகவே ஏனைய சமூகத்தவரும் கருதவேண்டிவரும் அல்லவா? என்று கொழும்பு மாவட்ட எம்.பி. ஆர். யோகராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் புகலிடம் கொடுப்பதன் விளைவு குறித்து விளக்கம் அளிப்பதற்கு அவ்வப்பகுதி பொலிஸ் உத்தியோகத்தர் மூலம் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்திற்கு வருகை தருமாறு இந்து குருமார்களுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே உத்தரவிட்டிருந்தார்.

விளக்கமளிக்கும் இக்கூட்டம் நேற்று முன்தினம் காலை 10-00மணிக்கு இடம் பெற்றது.

இக்கூட்டம் இடம்பெறுவது தொடர்பாக தகவல் கிடைத்ததையடுத்து கொழும்பு மாவட்ட எம்.பி. ஆர். யோகராஜன் பிரதிப்பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்ட போதே மேற்கண்ட கேள்வியை எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு இந்துமத குருமார்கள் புகலிடம் கொடுக்கிறார்கள் என்று கூறும் அதேவேளை நாசகாரச்செயல்களில் ஈடுபடும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு புகலிடம் கொடுக்கும் பெளத்த துறவிகளை ஒன்று கூட்டி அவர்களுக்கும் இதேபோன்று பிரதிப்பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்கும் கூட்டங்கள் வைக்க வேண்டும். அதன் பின்பே இந்துமதகுருமாருக்கு விளக்கமளிக்கும் கூட்டங்கள் வைக்கலாம் என்று யோகராஜன் எம்.பி. தெரிவித்துள்ளார். வ

#### தந்தையின்...

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, திபிலிப்பிட்டி என்ற இடத்தில் தனது தந்தையின் மரண அறிவித்தல் நோட்டீசை ஒட்டிக்கொண்டிருந்த போது அவ்வழியால் மது போதையில் வந்த சிலர் தேர்தல் சுவரொட்டி ஒட்டுவதாகஎண்ணி குறித்த நபரை கண்டபாட்டில் தாக்கி விட்டு கையில் வைத்திருந்த நோட்டீசையும் பறித்தெடுத்தனராம்.

இது குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந)

#### தேர்தல்...

கட்சி 254 முறைப்பாடுகளையும் பொதுஜன ஐக்கியமுன்னணி220முறைப்பாடுகளும், மக்கள் விடுதலை முன்னணி 73 முறைப்பாடுகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 13 முறைப்பாடுகளும்செய்யப்துள்ளன.

இதேவேளை நேற்றுமாத்திரம் 45 தேர்தல்வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ந-2)

#### ஓவியர்...

இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் சிறந்த சித்திர ஆசிரியராக கடமையாற்றினார்.

1950 ஆம் ஆண்டுகளில் விடுமுறைக் கால ஓவியக்கழகம் என்பதை அமைத்து பல ஓவியப்படைப்புக்களை உருவாக்கிய இவர் 1998 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநரால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-2)

### எரிபொருள் விலை அதிகரிப்பு?

(கொழும்பு)

எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்படலாமென தெரியவருகிறது. சர்வதேச சந்தையில் மசகு எண்ணையின் விலை அதிகரித்தமையினாலேயே இந்நிலை ஏற்படவுள்ளது.

இவ் விலைஅதிகரிப்பு தேர்தலின் பின் மேற்கொள்ளப்படலாமெனவும் தெரியவருகிறது. (ந)

#### எழுதுவினைஞர்...

வித்துள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 43 பேருக்கு இவ் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

இதே வேளை எழுதுவினைஞர் பதவிக்குத் தெரிவானவர்களுக்கு குறுகிய கால அறிவித்தலில் கொழும்பில் நேர்முகப்பரீட்சை நடைபெற இருந்தபோது அதனையாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளை ஈ.பி.டி.பி.யின் செயலாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-2)

#### தேர்தல் கண்...

சுவீடனைச் சேர்ந்த கிருஸ் ஸாப்பெர்னாண்டஸ் ஆகிய தேர்தல் கண்காணிப்பாளர்களே யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இக்குழுவினர் அரசியல் கட்சித் தலைவர்களை ஜீ.ரி.சற் நிறுவனத்தில் சந்தித்து தேர்தல் சம்பந்தமான ஒழுங்குகளை கேட்டறிந்து கொண்டனர்.

சுயேட்சைக்குழுக்கள் 1,2,3 ஐச் சேர்ந்த ஆ. கந்தசாமி, சிறிகாந்தா, விந்தன், விக்சன், ஜெயக்கொடி, ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த மகேஸ்வரன், தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த ஆனந்தசங்கரி, ரவிராஜ், ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(வ-12)

### கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் கப்பல் இன்று பருத்தித்துறையிலிருந்து திருமலைக்கு புறப்படுமென யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

பயணச்சீட்டுப் பெற்றவர்களை பயண ஆயத்தங்களுடன் இன்று காலை 7.30 மணிக்குயாழ் சிங்களமகாவித்தியாலய மைதானத்திற்கு வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

#### யுத்த...

மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

இதேவேளை அரியாலைப் பகுதியில்புலிகளின் ஐந்து பங்கர்களை குண்டு வீசி அழித்துள்ளதாகவும் இதனால் புலிகள் தரப்பில உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் விசேட தகவல் ஊடகம் தெரிவித்துள்ளது. (வ)

#### கள்ள...

பிடிப்பதற்கும் வசதியாக வாக்குப்பெட்டிகளில் 'ஸ்ரிக்கர்' அல்லது முத்திரைகள் பொறிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி அளித்துள்ளார்.

தேர்தல் வாக்குப்பெட்டிகளில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் விரும்பிய ஸ்ரிக்கர்களை ஒட்டலாம் என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் அறிவித்துள்ளார். (வ)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்

எப்ப வரும் மாமா?
சமாதானம் எப்ப வரும் மாமா?
அப்போ நாங்கள் எம் தெருவில் இறங்கி
மணல் வீடு கட்டி மகிழ்ந்தாடுவோமே!
எம் சிறார்களின் ஏக்கம் தீர...
ஈ. பி. டி. பி யை ஆதரிப்பீர்.





(இ/736)

(ஈ. பி. டி. பி)

இன்று வரை ஈ. பி. டி. பியின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாக 191 பேர் நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்கள்

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சகத்தில் [illegible] இல; 15, [illegible] தெரு, யாழ்ப்பாணம் [illegible] 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.